# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 10.06.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# வீடுகளில் இடம்பெற்றுள்ள 28% இறப்புகள்
## பேரழிவாக மாறும் எனவும் எச்சரிக்கை

(காந்தன்)

கொவிட் இறப்புகளில் 28 வீதமானவை வீடுகளில் இடம்பெற்றுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க நிர்வாக குழு உறுப்பினர் கலாநிதி பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## நாளொன்றுக்கு 38 பேர் உயிரிழப்பு நிலைமை மோசமடையலாம்
### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(ராஜ்)

நாட்டில் நாளொன்றில் கிட்டத்தட்ட 38 பேர் கொரோனா வைரஸினால் உயிரிழப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

கொரோனாவினால் நாளாந்தம் உயிரிழப்போரின் எண்ணிக்கை 38 ஆக உள்ளதாகவும், ஒருவேளை உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் அல்லது குறைவ

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கில் இருநாட்களில் 16210 பேருக்கு தடுப்பூசி




(மட்டுநிருபர்)

கிழக்கு மாகாணத்தில் கடந்த இருநாட்களில் 16210 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம் தௌபீக்

02 ஆம் பக்கத்தில்...

## ஓட்டமாவடியில் மூன்று கிராமங்கள் முடக்கம்



(ந.குகதர்சன்)

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீராவோடை கிழக்கு, மீராவோடை மேற்கு, மாஞ்சோலை ஆகிய கிராமங்கள் நேற்று புதன்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச். எம்.தாரிக் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...



மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரனா தடுப்பூசி ஏற்றப்பட்டு வரும் நிலையில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் பார்வையிடுவதை இங்கு காணலாம்.

## கித்துள் பகுதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் பலி



(விஜய்)

மட்டக்களப்பு,கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கித்துள் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கித்துள் வயல் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 53வயதுடைய

02 ஆம் பக்கத்தில்...

## நாவற்காடு வைத்தியசாலையின் கோரோனா சிகிச்சை பிரிவு திறப்பு



(எஸ்.சதீஸ்)

மட்டக்களப்பு, நாவற்காடு பிரதேச வைத்தியசாலையின் ஒரு பகுதியை கொரோனா

02 ஆம் பக்கத்தில்...

## ஓய்வுபெற்ற தாதியர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்து கொள்ளுங்கள்
### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



ஓய்வுபெற்ற தாதியர்களை தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்து கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில்

02 ஆம் பக்கத்தில்...






## ஆலையடிவேம்பில் முதற்கட்டமாக 3 ஆயிரம் சைனோபாம் தடுப்பூசி



(வி.சுகிர்தகுமார்)

3 ஆயிரம் வரையிலான சைனோபாம் தடுப்பூசிகளே முதற்கட்டமாக ஆலையடிவேம்பு

02 ஆம் பக்கத்தில்...

## சேதனப் பசளை மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த முடியாத நிலை
### விவசாயி கவலை

(வாஸ் கூஞ்ஞ)

பசுமையான நாடு நஞ்சு விசமற்ற நாளை என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கமைய சேதனப் பசளை உற்பத்தியாளர்களை பதிவு செய்யும் தேசிய வேலைத்திட்டமானது 07 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம்

02 ஆம் பக்கத்தில்...









## 'இலங்கை தொடர்பான தீர்மானம்' நல்லிணக்க முயற்சிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் அமெரிக்காவிடம் இலங்கை எடுத்துரைப்பு

அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான தீர்மானம் நல்லிணக்க முயற்சிகளுக்கு பாதிப்பை

02 ஆம் பக்கத்தில்...









## நுவரெலியா வைத்தியசாலையில் சுகாதார பணியாளர்கள் போராட்டம்!

(க.கிஷாந்தன்)

நுவரெலியா பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார பணியாளர்கள் தமது உரிமைகளைக்

02 ஆம் பக்கத்தில்...

## கித்துள் பகுதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

**பொன்னுத்துரை கௌகிகரன் என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். நேற்று மாலை 6 மணியளவில் வீட்டிலிருந்து வயல் காவலுக்காக கித்துள் வயல்பகுதிக்கு சென்ற வேளையே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.**

**சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக கரடியனாறு பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.**

**இப்பகுதியில் யானையின் தாக்குதல்கள் காரணமாக தொடர்ச்சியான இழப்புகளை பொதுமக்கள் எதிர்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.**

## சேதனப் பசளை மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி

திகதி வரை சகல கமநல சேவைகள் நிலையங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இவ் திட்டம் மன்னார் பகுதியிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக மன்னார் பெரிய கரிசல் விவசாயி அப்துல்லா ஜிப்ரி தெரிவிக்கையில்

நான் சேதனப் பசளையை உற்பத்தி செய்து இயற்கை விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றேன். தற்பொழுது மிளகாய். வெத்திலை, மஞ்சள் போன்ற பயிர்களை இயற்கை பசளையைக் கொண்டே செய்து வருகின்றேன்.

இரசாயண பசளைகளை முற்றாக தவிர்த்து தன்னால் உற்பத்தி செய்யப்படும் கூட்டுப்பசளையைக் கொண்டே பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றேன்.

## ஆலையடிவேம்பில் முதற்கட்டமாக 3 ஆயிரம்

பிரதேசத்திற்கு கிடைக்கலாம் என நம்பிக்கை தெரிவித்த ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.அகிலன் இந்த பொன்னான வாய்ப்பை பிரதேச மக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; நூறு வீதம் பாதுகாப்புடைய குறித்த தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை. ஏனெனில் பலதரப்பட்ட சோதனைகள் தாண்டி உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் இலங்கை வைத்திய நிபுணர்; குழு ஆகியோரின் சிபாரிசின் அடிப்படையில் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கமையவே குறித்த தடுப்பூசிகள் நமது நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேநேரம் அட்டாளைச்சேனை மற்றும் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் உள்ள இரு வைத்தியசாலைகளும் கொரோனா சிகி;ச்சை நிலையமாக விரைவில் செயற்படவுள்ளதுடன் இதனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திறந்து வைக்கவுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.










## நுவரெலியா வைத்தியசாலையில் சுகாதார பணியாளர்கள் போராட்டம்!

கோரி புதன்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நான்கு மணித்தியாலயங்கள் அடையாள பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தினை நுவரெலியா மாவட்ட வைத்திய சாலையின் முற்றத்தில் முன்னெடுத்தனர்.

ஒன்றிணைந்த சுகாதார ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பணி பகிஷ்கரிப்பில் 300 இற்கும் அதிகமான சுகாதார பணியாளர்கள் தங்களது கோரிக்கைகளை பதாதைகளில் பொறித்து ஏந்தியவாரு இப் போராட்டத்தை இவர்கள் முன்னெடுத்தனர்.

கடந்த இரண்டு மூன்று வருடங்களுக்கு மேலாக தொழில்புரியும் சுகாதார பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும், மேலதிக சேவை நேரத்திற்கான கொடுப்பனவை வழங்க வேண்டும், கொரோனா காலத்தில் ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவு மற்றும் கொரோனா பாதுகாப்பு உடை உள்ளிட்ட சலுகைகளை தமக்கும் வழங்க வேண்டும் என மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் இன்றுடன் நான்காவது முறையாக போராட்டத்தினை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஓய்வுபெற்ற தாதியர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்து

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி ஆராச்சிக்கு ஆலோசனை வழங்கினார்.

தாதியர் சேவையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பொது சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர், மேல் மாகாண பிரதான சங்கநாயக்கர் முறுத்தெட்டுவே ஆனந்த தேரரின் வேண்டுகோளுக்கமைய நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் சுமார் 34000 தாதியர்கள் இதுவரை தாதியர் சேவையில் ஈடுபட்டுள்ளதுடன், அவர்கள் இதுவரை முகங்கொடுத்துள்ள சேவையில் ஈடுபட்டுள்ளதுடன், அவர்கள் இதுவரை முகங்கொடுத்துள்ள சேவையில் ஈடுபட்டுள்ளதுடன், அவர்கள் இதுவரை முகங்கொடுத்துள்ள குறுகிய மற்றும் நீண்டகால தீர்வு காணல் மற்றும் முன்மொழிவுகள் குறித்து கலந்துரையாடுவதே இச்சந்திப்பின் நோக்கமாகும்.

இதன்போது தாதியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் முறுத்தெட்டுவே ஆனந்த தேரர் கருத்து தெரிவித்தார்.

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவிற்கு பயிற்சி பெறாத தாதியர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றமை குறித்து வணக்கத்திற்குரிய தேரர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அது தொடர்பில் கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி ஆராச்சி அவர்கள், தற்போது ஓராண்டிற்கு பயிற்சிக்காக 2000 எனும் குறைந்த எண்ணிக்கையிலான தாதியர்கள் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்படுவதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் சுகாதார சேவையில் ஈடுபடும் அனைவரும் இதுவரை சிறப்பாக சேவையாற்றி வருவதாக தெரிவித்த கௌரவ பிரதமர், அவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் வினவினார்.

தாதியர் பட்டத்தை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கௌரவ பிரதமர், சுகாதார அமைச்சருக்கு தெரிவித்தார்.

தற்போது தாதியர் பட்டத்தை வழங்குவதற்கான பணி சட்ட வரைவுகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட வரைவை விரைவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பது இந்த கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

குறித்த சந்திப்பில் சுகாதார அமைச்சர் கௌரவ பவித்ரா வன்னஆராச்சி, பிரதமரின் செயலாளர் திரு.காமினி செனரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி திரு.யோஷித ராஜபக்ஷ, சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் எஸ்.எச்.முனசிங்க, சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, பொது சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைமை செயலாளர் எச்.ஏ.டீ.கல்யாணி, உப தலைவர் ஆர்.கே.படுவிட, உப செயலாளர் புஷ்பா ரம்யானி டி சொய்சா, கந்தானை தாதியர் கல்லூரியின் அதிபர் டப்ளிவ்.ஏ.கீர்த்தி உள்ளிட்ட பலர் குறித்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## நாவற்காடு வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை பிரிவு திறப்பு

**சிகிச்சை பிரிவாக புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது..**

**மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன் மற்றும் நாவற்காடு பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் உள்ளிட்டோர் அடங்கிய தொற்று நோய் பிரிவு வைத்தியர்களால் குறித்த சிகிச்சைப் பிரிவை உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. இங்கு நூறு கட்டில்கள் அமைக்கப்பட்டு நூறு நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறக்கூடியதாக இந்த சிகிச்சைப் பிரிவு அமைந்துள்ளது. எனவும் இன்றுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் திறக்கப்பட்ட கொவிட் சிகிச்சை நிலையங்களில் 667 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் வகையில் 667 கட்டில்கள் இடப்பட்டுள்ளது.**

**என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன் இதன்போது தெரிவித்தார்.**

## ஓட்டமாவடியில் மூன்று கிராமங்கள் முடக்கம்

**ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா நோயாளிகள் அதிகரித்து காணப்படுவதுடன், மரணங்களும் ஏற்பட்டுள்ள நிலையில் வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இன்று புதன் கிழமை அவசர கூட்டம் இடம்பெற்ற போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மிராவோடை கிழக்கு, மீராவோடை மேற்கு, மாஞ்சோலை ஆகிய கிராமங்களில் அதிக கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையிலும், நேற்று செவ்வாய்க்கிழமை இரவு கொரோனா தொற்றினால் ஒரு மரணமும் இடம்பெற்றுள்ளது. இதன் பிரகாரம் குறித்த பகுதிகள் தனிமைப்படுத்தல் பிரதேசமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.**

**அத்தோடு தனிமைப்படுத்தல் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு ஓட்டமாவடி பிரதேச செயலகம் ஊடாக அத்தியாவசிய பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குறித்த பகுதி மக்கள் தனிமைப்படுத்தலினை மீறாது வீடுகளில் இருந்து கொள்ளுமாறும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.**

**ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா, ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதர் ஏ.எல். நௌபர், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன, கும்புறுமூலை இராணுவ அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

**கடந்த சனிக்கிழமை 133 நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் செவ்வாய்க்கிழமை மாலை கிடைக்கப்பட்டதன் பிரகாரம் 29 தொற்றாளர்கள் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

## கிழக்கில் இருநாட்களில் 16210 பேருக்கு தொற்று

**தெரிவித்தார்.**

**அம்பாறைப்பிராந்தியத்தில் 7583 பேரும்,மட்டக்களப்புமாவட்டத்தில் 5052பேரும், திருகோணமலையில் 3560பேரும் கடந்த இரு நாட்களில் தடுப்பூசியினை பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.**

## நாளொன்றுக்கு 38 பேர் உயிரிழப்பு நிலைமை மோசமடையலாம்

டையலாம் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஒரே நாளில் கிட்டத்தட்ட 38 கொரோனா மரணங்கள் நிகழ்ந்ததாக வரைபடமொன்றின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையின் மூலம் தெரியவந்தது. ஆயினும், தொற்று நோயியல் பிரிவிலிருந்து தாமதமாக புள்ளி விபரங்களை நாங்கள் பெற்றதால், கணிப்புகளை செய்வது மற்றும் இறுதி முடிவுகளுக்கு வருவது மிகவும் கடினம்.

கடந்த ஆறு அல்லது ஏழு நாட்களில் முந்தைய கொரோனா மரணங்கள் 30 இற்கும் மேற்பட்டதாக அறிக்கைகள் வழங்கப்பட்டன. ஆனால், அறிவிக்கப்பட்ட திகதியில் ஒன்று அல்லது இரண்டு மரணங்கள் மட்டுமே நிகழ்ந்தன. இது தொற்று நோயியல் பிரிவில் இருந்து புள்ளி விபரங்களை வெளியிடுவதில் உள்ள தவறான தன்மையைக் காட்டுவது மாத்திரமல்லாது, புள்ளி விபரங்களும் வழக்கற்றுப் போய்விட்டன என அவர் தெரிவித்தார்.

இதனிடையே, கடந்த சில நாட்களில் கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளும்போது, மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தில் தான் அதிக எண்ணிக்கையிலான மரணங்கள் பதிவாகியுள்ளதாக அவர் கூறினார்.

அந்த மரணங்களில் 28 சதவீதம் வீடுகளில் பதிவாகியுள்ளதாகவும், இது அபாயகரமான நிலைமையாக பார்க்கப்படுகின்றது. இதில் கொழும்பு மாவட்டத்தில் வீடுகளில் ஏற்பட்ட மரணங்களின் சதவீதம் 18 சதவீதமாகும். கடந்த மே மாதத்தில் 793 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. அந்த மரணங்களில் 123 மரணங்கள் களுத்துறையில் இடம்பெற்றுள்ளது. கொழும்பில் 99 மரணங்கள், காலி 96 மரணங்கள், கம்பஹாவில் 81 மரணங்கள் என அதிகபட்ச மரணங்கள் பதிவாகியுள்ளன.

எனவே, நிலைமையை துல்லியமாக பகுப்பாய்வு செய்ய வேண்டும். இல்லையென்றால், நிலைமை ஒரு பெரிய பேரழிவாக மாறும் என வைத்தியர் பிரசாத் கொலம்பகே குறிப்பிட்டார்.

## வீடுகளில் இடம்பெற்றுள்ள 28% இறப்புகள் பேரழிவாக மாறும் எனவும் எச்சரிக்கை

தொற்றுநோயியல் பிரிவு கடந்த மாதத்தில் வெளியிடப்பட்ட மொத்த நாளாந்த இறப்பு பதிவுகளை தாம் கவனித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

தரவுகளை வைத்து பார்த்தபோது ஒரே நாளில் கிட்டத்தட்ட 38 கோவிட் இறப்புகள் இடம்பெற்றுள்ளமை தெரியவருகிறது.

ஆயினும், தொற்றுநோயியல் பிரிவிலிருந்து தாமதமான புள்ளிவிபரங்கள் வருவதால் கணிப்புகளைச் செய்வது மற்றும் முடிவுகளுக்கு வருவது மிகவும் கடினம்.

தொற்றுநோயியல் பிரிவில் இருந்து புள்ளிவிவரங்களை வெளியிடுவதில் தவறான தன்மையும் அவதானிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களில் இறந்தவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளும்போது, மேற்கு மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தில் இருந்து அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் பதிவாகியுள்ளன. கோவிட் இறப்புகளில் 28% மானவை வீடுகளில் நிகழ்ந்துள்ளன. கொழும்பு மாவட்டத்தில் வீடுகளில் ஏற்பட்ட இறப்புகள் 18 சதவீதமாகும்.

எனவே, நிலைமையை துல்லியமாக பகுப்பாய்வு செய்ய வேண்டும். இல்லையென்றால், நிலைமை ஒரு பெரிய பேரழிவாக மாறும் என்று கொலம்பகே எச்சரித்துள்ளார்.

## ‘இலங்கை தொடர்பான தீர்மானம்’ நல்லிணக்க முயற்சிகளில் பாதிப்பை

ஏற்படுத்தும் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதரக பொறுப்பதிகாரி மார்ட்டின் கெலி, இலங்கை வெளிவிவகார அமைச்சரை சந்தித்தவேளை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன மேற்கண்ட விடயத்தை தெரிவித்துள்ளார்.

அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான தீர்மானத்தை அமெரிக்கா கைவிட வேண்டும் என்ற முயற்சிகளுக்காக இலங்கை அரசாங்கம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெரிவிப்பதற்காக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினை தொடர்புகொள்வதற்கான முயற்சிகளை வெளிவிவகார அமைச்சர் மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் தூதரக பொறுப்பதிகாரி மார்ட்டின் கெலி யை சந்தித்தவேளை அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தலையீட்டை அமைச்சர் தினேஷ் குணவர்தன கோரியுள்ளார்.

இதேவேளை கொவக்ஸ் திட்டத்தின் கீழ் தடுப்பூசிகளை பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் ஒன்று இலங்கை என்ற அமெரிக்க ஜனாதிபதியின் அறிவிப்பை வெளிவிவகார அமைச்சர் வரவேற்றுள்ளார்.

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...


மருத்துவ காப்புறுதி


வாகனக் காப்புறுதி


குழந்தைகளுக்கான காப்புறுதி


ஆயுட் காப்புறுதி


சட்டக் காப்புறுதி


Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65




Sj SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt



உதயகுமார் கல்வி நிலையம்




முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923

n.uthayakumar1981@gmail.com



SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி



MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலமணைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

## பிரதிக் கல்விப்பணிப்பாளர் நௌசாட் மாவனல்ல சாஹிரா தேசிய பாடசாலைக்கு அதிபராக நியமனம்

(வி.ரி.சகாதேவ ராஜா)



சம்மாந்துறை வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர் எ.எம்.நௌசாட் கல்வியமைச்சின் செயலாளரினால் மாவனல்ல சாஹிரா தேசிய பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழுவின் அனுமதியின் அடிப்படையில் கல்வியமைச்சின் செயலாளரினால் உடன் செயற்படும் வண்ணம் இலங்கை கல்வி நிர்வாக சேவை இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த ஏ. முஹம்மது நௌஸாத் மாவனல்ல சாஹிரா தேசிய பாடசாலைக்கு புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் கல்வி அமைச்சில் நேற்று வழங்கப்பட்டது. மாவனெல்ல சாஹிரா தேசிய பாடசாலை அதிபர் பதவி இ.க.நி.சேவை தரம் 2க்கான பதவி என்பதால் நேர்முகப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று முதல் தெரிவில் இவர் அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சம்மாந்துறையைச்சேர்ந்த ஜனாப் நௌசாட் கல்விப்புலத்தில் 9வருடசேவையைக் கொண்டவர்.

கொழும்பு பல்கழைலக்கழகத்தில் தகவல்தொழினுட்ப பட்டதாரியான இவர் ஆசிரியராக றாணமடு இந்துமகாவித்தியாலயத்தில் ஒருவருடம் கற்பித்தவேளை இலங்கைகல்வி நிருவாகசேவையில் இணைந்துகொண்டார்.

இசுருபாய கல்வியமைச்சு வடமத்தியமாகாண கல்வித்திணைக்களம் மூதூர் வலயக்கல்விப்பணிமனை கிழக்குமாகாண கல்வித்திணைக்களம் ஆகிய இடங்களில் கல்விநிருவாகசேவைபதவிகளை வகித்து திறம்படசேவையாற்றிவர்.

இறுதியாக கடந்த நான்கு வருடங்களாக சம்மாந்துறை கல்விவலயத்தின்பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வருகிறார் என்பதும், அண்மையில் எ.எம். நௌஷாட் அஸ்-ஸிராஜின் வரலாற்றேடு எனும் வரலாற்றுநூலை எழுதி வெளியிட்டுவைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்டத்தில் 4 தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமனம்






(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழுவின் அனுமதியின் அடிப்படையில் கல்வியமைச்சின் செயலாளரினால் உடன்செயற்படும் வண்ணம் அம்பாறை மாவட்டத்தில் அதிபர் வெற்றிடம் நிலவிய நான்கு தேசிய பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அதிபர் சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்த எம்.ஐ.மீராமொகைதீன் சம்மாந்துறை வலயத்திலுள்ள சம்மாந்துறை அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சம்மாந்துறை செந்நெல் சாஹிறாக்கல்லூரியின் அதிபராகவிருந்தவர்.

இலங்கை அதிபர் சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்த பா.சந்திரேஸ்வரன் திருக்கோவில் வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்தியமகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியின் அதிபராக இருந்தவர்.

இலங்கை அதிபர் சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்த எம்.ஐ.மாஹிர் சம்மாந்துறை வலயத்திலுள்ள இறக்காமம் அஸ்ரப் மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்கு புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சம்மாந்துறை அறபா வித்தியாலய அதிபராகவிருந்தவர்.

இலங்கை அதிபர் சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்த டேவிட் அமிர்தலிங்கம் திருக்கோவில் வலயத்திலுள்ள அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ணா தேசிய பாடசாலைக்கு புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அக்கரைப்பற்று இ.கி.மிசன் பாடசாலை அதிபராகவிருந்தவர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று கல்வி அமைச்சில் வழங்கப்பட்டன.





## நுவரெலியா மாவட்டத்தில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்

(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத்தில் கொவிட் - 19 தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று ஆரம்பமானது. நுவரெலியா காமினி தேசிய பாடசாலையில் வைத்து ஆரம்பமான தடுப்பூசி திட்டத்தில் முதற்கட்டமாக அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் அரச ஊழியர்கள், பொலிஸார், தோட்ட அதிகாரிகள் மற்றும் தோட்ட முன்களபணியாளர்கள் ஆகியோருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்துக்கென 50 ஆயிரம் சினோபாம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் கொரோனா வைரஸ் பரவும் அபாயமுள்ள கிராம சேவகர் பிரிவுகளில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 40 ஆயிரம் தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஏனைய 10 ஆயிரம் தடுப்பூசிகள் பொலிஸார், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் அரச ஊழியர்கள் மற்றும் பெருந்தோட்டத்தொழிற்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

காமினி தேசிய பாடசாலையில் ஆரம்பமான தடுப்பூசி ஏற்றும் பணியை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேரடி பயணம் மேற்கொண்டு கண்காணித்தார்.

இந்த கண்காணிப்பில் பிரஜாசக்தியின் பணிப்பாளரும், கொவிட் தடுப்பூசி செயலணியின் பிரதானியுமான பாரத் அருள்சாமி, மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர், நுவரெலியா மாவட்ட சுகாதார பணிப்பாளர், இராணுவ அதிகாரிகள், ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## சேதனப் பசளை ஊக்குவித்தல் தொடர்பில் திருமலை மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

ஆரோக்கியம் மற்றும் வினைத்திறன் வாய்ந்த பிரஜைகளை உருவாக்குவதற்கு, நச்சுத்தன்மையற்ற உணவுக்கான மக்களின் உரிமைகள், சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக, விவசாயத்துறைக்குள் சேதனப் பசளைப் பாவனையைக் கொண்டுவருவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அதனடிப்படையில் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப்பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட பசுமையான சமூக பொருளாதார கொள்கைக்கமைவாக சேதன விவசாயத்தை ஊக்குவித்தல் தொடர்பான விசேட கூட்டம் செவ்வாய்க் கிழமை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளவின் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து நடைபெற்றது.

மாவட்டத்தில் உள்ள சேதனப்பசளை உற்பத்தியாளர்களை பதிவு செய்து அவர்களுக்கு அவசியமான தொழிநுட்ப மற்றும் ஏனைய வழிகாட்டுதல்களை வழங்கி மாவட்டத்தின் கேள்விக்கேற்ற சேதனப் பசளையை உள்ளூரிலே உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதே இக்கூட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்திருந்தது.

இக்கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், மாவட்ட விவசாய பணிப்பாளர் கே.குகதாசன், துறைசார் திணைக்கள தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## ஏறாவூரில் 60 வயதுக்கு மேற்பட்ட 748 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது



(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர்ப் பிரதேசத்தில் அறுபது வயதிற்கு கூடிய 748 பேருக்கு சினோபாம் கொரோனா தடுப்பூசி நேற்று வழங்கப்பட்டது.

பிரதேச சுகாதார வைத்தியதிகாரி திருமதி சாபிறா வசீம் முன்னிலையில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் மிச்நகர் கிராம சேவகர் பிரிவிலுள்ள 547 பேர் இல்மா வித்தியாலய நிலையத்திலும் ஏறாவூர் - 3ஏ பிரிவிலுள்ள 201 நபர்கள் ஏறாவூர் அல்- ஜுப்ரிய்யா பாடசாலை மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள நிலையத்திலும் தடுப்பூசியினை ஏற்றிக் கொண்டனர்.

வயோதிபர்களில் அதிகமான பெண்கள் தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதற்கு வருகை தந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் இத்தடுப்பூசியை ஏற்றிக் கொண்டதில் மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக தடுப்பூசியை ஏற்றிக்கொண்டவர்கள் தெரிவித்தனர்.

## 'அனைவரும் இணைந்து வாருங்கள்' சுகாதார சேவைகள் பணிப்பாளர் அழைப்பு



(பைஷல் இஸ்மாயில்)

பொது மக்களுக்கான தெளிவுபடுத்தல்களை நடைமுறை செய்ய கட்டமைப்பு ரீதியாக வைத்தியசாலைகளும், பொறுப்பு வாய்ந்த அமைப்புக்களும் முன்வர வேண்டும் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பணத்தை மட்டும் குறிவைத்து தங்களை நல்லவராகவும் மக்களை இரட்சிப்பவர்களாகவும் விளம்பரப்படுத்தி தகவல்களை மறைத்து நடைமுறைகளை மீறும் தனியார் கிளினிக் மற்றும் வைத்தியசாலைகளைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் மனமாற்றம் பெறவேண்டும். அவர்கள் தான் தற்போது ஊருக்குள் தொற்று பரவ இடமளிக்கிறார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தலைக்கவசம் அணிவது போக்குவரத்து பொலிசாருக்காகத்தான் என்று நினைத்து கொண்டிருக்கும் சமூக ஒழுக்கம், புத்திசாலித்தனம் அதிகம் நிறைந்துள்ள நாட்டில் வாழ்கின்றவர்கள் நாம். அத்தோடு குறுக்கு வழிதான் பணம் சம்பாதிக்கும் விடயங்கள் என ஆற்றிக் கொள்ளவும் இங்கு தாரக மந்திரமாக பலருக்கு இருக்கிறது. இவையெல்லாம் இணைந்து தான் இந்த கொரானா தொற்றை மக்கள் மத்தியில் பெருக வழிவகுக்கிறது.

தடுப்பூசி, பாதுகாப்பு முறைமைகள் வைரஸ் தொற்றுக்கான அடிப்படை விடைகளாக இருந்தாலும் அவைகளை முற்றிலும் புரிந்தவர்களாக இருந்தாலும், நீங்கள் கூறும் விழிப்புணர்வை பெரியளவில் ஊடகங்களைத் தவிர வேறு யாராலும் ஏற்படுத்த முடியாது. இந்த விடயத்தில் ஊடகங்களின் பங்களிப்பு மிகச் சிறப்பாக உள்ளது.

விதிகளை மீறி வீதியில் உலா வருகின்றவர்களுக்கு கட்டாய ஆன்டியஜன் சிலருக்கு செய்யப்படுவது உண்மைதான். அது அவசியமாக உணரப்பட்டதால்தான் இப்பிராந்தியத்தில் தேவையற்ற விதத்தில் வீதியில் உலா வருகின்றவர்களின் நடமாற்றம் குறைந்துள்ளது. 60 கஏஐ களையும் 13 MOH களையும் கல்முனை போன்ற பிராந்தியத்தில் வைத்து கொண்டு 5 இலட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் சார்ந்த அனைத்து விடயங்களையும் முகாமைத்துவம் செய்பவன் என்கிற ரீதியில் பகலிரவாக அரச ஊதியத்தை மட்டும் பெற்றுக் கொண்டு அவர்கள் கடந்த ஒரு வருடமாக படுகின்ற அவஸ்தை மட்டிட முடியாதது.

கீழ்த்தரமான விமர்சனங்கள், இனவாதம், பிரதேசவாதம் ஒருபுறம் இருக்க, மந்தைகளாக திரிகின்ற மனிதர்களை கட்டுப்படுத்த இராணுவயுக்த்தியும் ஒரு போர்க்கால பேரிடர் முகாமைத்துவம் என்பதை புரியாதவர் யாரும் இருக்க போவதில்லை. விமர்சனங்கள் வைப்பதை 100% ஏற்றுக் கொண்டாலும் எங்களது நடவடிக்கைகளை இப்போதைக்கு மாற்றி கொள்ள முடியாது.

கல்முனை பிராந்திய புள்ளிவிபரங்கள் கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல முழு இலங்கையிலும் மிக சிறப்பான முறையில் காணப்படுவதற்கு எமது சுகாதார உத்தியோகத்தர்களது பாரிய அர்ப்பணிப்பு மிக்க சேவையே பிரதான காரணமாக அமைந்தது. ஒவ்வொரு பிராந்தியங்களும் இரண்டாயிரம் நோயாளிகளுடனும் 100 மரணங்களுடனும் இருக்கும் போது கல்முனை பிராந்தியம் 400 நோயாளிகளையும் 07 மரணங்களையும் மட்டுமே மூன்றாவது அலையில் எதிர்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.






# மன்னாரில் நூறு வயதுக்கு மேற்பட்ட ஒருவரும் இல்லை நஞ்சுள்ள உணவுகளை தவிர்ப்போம்

## அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல்



(வாஸ் கூஞ்ஞ)

இலங்கையில் நூறு வயதுக்கு மேற்பட்டவர்கள் ஏனைய மாவட்டங்களில் ஓரிருவர் இருக்கின்றபோதும் மன்னார் மாவட்டத்தில் மட்டும் எவரும் இல்லையே என்பது கவலைக்குரிய விடயமாக இருந்தாலும் இதற்கு காரணம் நாம் நஞ்சு கலந்த உணவு வகைகளை உண்பதே ஆகும். ஆகவே நாம் எமது புராதண காலத்தை நோக்கி எமது உணவு வகைகளை கையாள முனைய வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி எண்ணக்கருவுக்கமைய நாட்டில் விவசாயிகள் இயற்கை பசளை மூலம் தங்கள் விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும் என்ற அறிவுறுத்தலை வழங்கியுள்ளதைத் தொடர்ந்து மன்னார் நகர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இநற்கை பசளை உற்பத்தி செய்யும் இடங்களை பார்வையிட்டபின் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்

.

மன்னார் நகர சபையினர் இயற்கைப் பசளைகளை தயாரிக்கும் இடத்தையும் பார்வையிட்டோம். என்னுடன் மன்னார் மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர், மன்னார் நகர சபை செயலாளர், மன்னார் மாவட்ட விவசாய உத்தியோகத்தர் ஆகியோர் கொண்ட ஒரு குழுவாக நாங்கள் இவ் களப்பயணத்தை மேற்கொண்டிருந்தோம்.

இங்கு நோக்குகையில் மன்னார் நகர சபையினர் சேகரிக்கின்ற குப்பைகளின் மூலம் இந்த கூட்டுப்பசளையை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இதன் மூலம் மாதாந்தம் 8000 கிலோ இவ் கூட்டுப்பசளையை விற்பனை செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர். அதுவும் ஒரு கிலோ பசளையை 15 ரூபா வீதமே விற்பனை செய்து வருகின்றனர்.

அத்துடன் பெரியகரிசல் கிராமத்தில் ஒரு தனிநபர் இயற்கைப் பசளையை தானே உருவாக்கி அதன் மூலம் பயிர் செய்கைகளை மேற்கொண்டு இதன் மூலம் வருமானத்தை பெறுகின்றதையும் மேற்கொள்ளப்பட்ட எமது களப்பயணத்தின்போது (புதன்கிழமை) அவதானித்துள்ளோம்.

இந்த விவசாயி இந்தியாவிலுள்ள தொழில் நுட்பம் கொண்டவர்களிடம் வட்செப் மூலம் தனது அறிவைப்பெற்றே இவ் விவசாய நெற்செய்கையை மேற்கொண்டு வருவது மிகவும் பாராட்டக்குரியது.

இவர் மூலமும் நாங்கள் எங்கள் மாவட்டத்திலுள்ள ஏனைய விவசாயிகளுக்கு இவ் தொழில்நுட்பத்தை முன்னெடுக்கவும் உத்தேசித்துள்ளோம்.

இத்துடன் எங்கள் கமநல சேவை உதவி ஆணையாளர் இவருடன் தொடர்புகொண்டு இவ் விவசாயிக்கு மேலதிக உதவிகள் செய்துகொடுத்து இவரிடமிருந்து தரமான கூட்டுப்பசளையை பெற்று இங்குள்ள விவசாயிகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.கடந்த வாரம் எமது நாட்டிலே நூறு வயதினருக்கு மேற்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் விபரத்தை நான் ஆராய்ந்தபோது இலங்கையில் மன்னார் மாவட்டத்தை தவிர ஏனைய மாவட்டங்களில் ஓரிருவராவது இவ்வாறான வயதுடையோர் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மட்டுமே நூறு வயதுக்கு மேற்பட்ட ஒருவரும் இல்லையே என்ற கவலையாக இருந்தது. இதற்கு ஒரு காரணம் நாம் இயற்கைக்குள் இருந்து விலகி செயற்கைக்குள் சென்றுள்ளதும் ஆயுள் குறைவுக்கும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆகவே நாம் எமது புராதண நிலைக்கு மீண்டும் திரும்ப வேண்டும் என்ற ஒரு கட்டத்தில் இருக்கின்றோம். இப்பொழுது நாம் அதிகமாக நஞ்சு கலந்த உணவு வகைகளையே உண்டு வருகின்றோம். இதன் மூலம் புதிய புதிய நோய்களுக்கும் நாம் உள்ளாகி வருகின்றோம். ஆகவே நாம் இயற்கை பசளைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகளை உண்டு நாம் தேக ஆரோக்கியதத்துடன் வாழ முனைவோம் என தெரிவித்தார். இதற்கு எமது கமநல சேவை திணைக்களம் உதவிகள் புரியும் என தெரிவித்தார்.

# ஒட்டமாவடியில் அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி



(ந.குகதர்சன்)

ஒட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஒட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இந்தவகையில் ஒட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் ஒட்டமாவடி 2ம் வட்டாரம் மற்றும் ஒட்டமாவடி 3ம் வட்டார பிரிவிலுள்ள அறுபது வயதிற்கு மேற்பட்ட பொது மக்கள் மற்றும் ஒட்டமாவடி சூடுபத்தினசேனையில் கொரோனாவில் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யும் மையவாடியில் கடமையாற்றும் இராணுவத்தினர் ஆகியோருக்கு ஒட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் கொவிட் 19 தடுப்பூசிகள் இன்று புதன்கிழமை ஏற்றப்பட்டது.

அறுபது வயதிற்கு மேற்பட்ட பொது மக்கள், பெற்றோர்கள், உறவினர்கள் அனைவரும் தங்களது உயிரினை கொடிய கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காக இந்த தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளவும். இந்த தடுப்பூசி தொடர்பில் ஏதும் சந்தேகங்கள் இருப்பின் தடுப்பூசி நிலையத்தில் உள்ள வைத்தியரை அல்லது பொது சுகாதார பரிசோதகரை அனுகி இது தொடர்பான விளக்கங்களை பெற்றுக் கொள்ள முடியும் என ஒட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு 25,000 தடுப்பு ஊசிகள் முதல் கட்டமாக கிடைக்கப் பெற்றுள்ளது.

# கோறளைப்பற்று மத்தியில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பம்



(ந.குகதர்சன்)

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் அறுபது வயதிற்கு மேற்பட்ட பொது மக்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணிகள் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரி.நஜீப்காப் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இந்தவகையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அறுபது வயதிற்கு மேற்பட்ட பொது மக்களுக்கு வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் கொவிட் 19 தடுப்பூசிகள் நேற்று புதன்கிழமை ஏற்றப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு 25,000 தடுப்பு ஊசிகள் முதல் கட்டமாக கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த நிலையில் பதினான்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரனின் வழிகாட்டலில் நடைபெற்று வருகின்றது.

# நகர அபிவிருத்தி திட்டத்தில் திருமலை மாவட்டத்தில் 4 பிரதேசங்கள் தெரிவு

(அப்துல்சலாம் யாசீம்)

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் திருகோணமலை மாவட்டத்தில் 4 பிரதேசங்கள் நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட உள்ளதாக கிழக்குமாகாண நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி கரையோர பாதுகாப்பு கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்துதல் இராஜாங்க அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள 100 நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், பதவிசிரிபுற, புல்மோட்டை மற்றும் சேறுவில போன்ற பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளதாக கிழக்குமாகாண நகர அபிவிருத்தி அதிகார சபையின் அத்தியட்சகர் எல். ஜே. லியனகே தெரிவித்தார்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நாட்டில் 100 நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இவ் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார் .

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் நான்கு பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில புலன் அத்துகோரலவினால் ஜனாதிபதியிடம் விஷேட வேண்டுகோள் விடுக்கப்பட்டதையடுத்து திருகோணமலை மாவட்டத்தில் 4 பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் தொடர்பிலான அனுமதி கிடைத்தமை தொடர்பிலான கடிதங்களின் பிரதிகளை மாவட்ட அரசாங்க அதிபர், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர்களுக்கு அனுப்பி வைத்துள்ளதுள்ளனர்.

# தனியார் வகுப்பு நடத்தினால் கடுமையான சட்ட நடவடிக்கை



(ந.குகதர்சன்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் தனியார் வகுப்பு நடாத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. மீறி செயற்பட்டால் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதுடன், கொரோனா சட்டத்தினை மீறியமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோறளைப்பற்றுமத்தி பிரதேச செயலாளர் பிரிவில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ள நிலையிலும், ஐந்து மரணங்கள் இடம்பெற்ற நிலையிலும் அவசரகூட்டம் செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது இராவணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளல், பிரதேச மட்ட கொரோனா குழு, பள்ளிவாயல்கள், பொலிஸார் இணைந்து கிராம மட்டத்தில் அவதானிப்புக்களை மேற்கொள்ளல், மீன் பிடி தொடர்பான நடவடிக்கைகளுக்கு பிரதேச செயலக உதவித் திட்ட பணிப்பாளர், மீன்பிடி பரிசோதகர் மற்றும் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக முகாமையாளர் ஆகியோர் இணைந்து திட்டம் வகுத்தல்.

கிராம மட்ட குழு கூடி ஒவ்வொரு கிராமத்திற்குமான விழிப்புணர்வு மற்றும் முன்னெடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் செயலகத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல், உள்ளூர் கடைகளுக்கு வீட்டு விநியோகம் வழங்குதல் தொடர்பில் கிராம மட்ட குழு தீர்மானித்தல், கிராம மட்டத்தில் நடைபெறும் ஒன்று கூடல், திருமண நிகழ்வு, வீடுகளில் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுவதை கிராம மட்ட குழு கண்காணித்து நடவடிக்கை எடுத்தல் மரணங்கள் தொடர்பில் இன்னும் சில தினங்களில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலாசனை பெற்று அது தொடர்பான நடவடிக்கை அறிவிக்கப்படும். இக்குழுவில் வாழைச்சேனை வர்த்தக சங்கம் மற்றும்; பள்ளிவாயல்கள் இணைந்து சேவையாற்றும்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரி.நஜீப்காப், வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித், செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.றுவைத், பள்ளிவாயல் பிரதிநிதிகள், வாழைச்சேனை வர்த்தக சங்க பிரதிநிதிகள், இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் கிராம சேவை அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கல்மெட்டியாவ வடக்கு ஈச்சங் குள காட்டுப் பகுதியில் இறந்த நிலையில் யானையின் உடலம் மீட்பு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மெட்டியாவ வடக்கு ஈச்சங் குளம் காட்டுப் பகுதியை அண்டிய பகுதியில் யானை ஒன்று இறந்து கிடப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 3035 வயது மதிக்கத்தக்க ஆண் கொம்பன் யானை எனவும் எட்டு அடி உயரமும் கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதே வேலை குறித்த யானை யானது இரு வாரங்களுக்கு முன்னர் பன்றிக்கு வைக்கும் சோளவ வெடியை உட்கொண்டு தொண்டையில் சிக்கியதன் காரணமாக உணவு சாப்பிட முடியாது இறந்திருக்கலாம் என வன ஜீவராசிக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரண்டரை அடி நீளம் கொண்ட தந்தத்தை உடைய இந்த யானை அப்பகுதியில் நடமாடியதாகவும் தெரிவித்தனர். யானையின் உயிரிழப்பு சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வனஜீவராசி அதிகாரிகளுடன் இணைந்து தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.




# மாணவர்களிடம் பணம் வசூலித்து ZOOM வகுப்புக்களை நடாத்தும் ஆசிரியர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## மட்டக்களப்பு மத்தி வலய கல்விப் பணிப்பாளர் எச்சரிக்கை

தற்போதைய கொரோனா இடர்காலத்தில் மாணவர்களிடம் பணம் வசூலித்து நூணிணிட் வகுப்புக்களை நடாத்தும் ஆசிரியர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென மட்டக்களப்பு மத்தி வலய கல்விப்பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா அறிவித்துள்ளார்.

இவ்வாறான ஆசிரியர்களது பெயர்பட்டியலை சமர்ப்பிக்குமாறு அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வலயக்கல்விப்பணிமனை உத்தியோகத்தர்களுக்கான நூணிணிட் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைக்குறிப்பிட்டார்.

கொரோனா தொற்று அச்சத்தினால் பாடசாலைகள் காலவரையறையின்றி மூடப்பட்டபோதிலும் எவ்வித குறைவுமின்றி உரியகாலத்தில் ஆசிரியர்களுக்கான சம்பளம் வழங்கப்படுகிறது.இந்நிலையில் பாடசாலை நடைபெறும் காலத்தில் ஆசிரியர்களுக்கு ஏற்படும் போக்குவரத்து மற்றும் சிற்றுண்டிச்சாலை உள்ளிட்ட எவ்வித செலவும் தற்போது ஏற்படுவதில்லை.

ஆனால் பெற்றார்கள் வாழ்வாதாரத் தொழிலை இழந்து தவிக்கின்ற பரிதாபகரமான சூழ்நிலையில் தமது பொறுப்புக்களை மறந்து ஆசிரியர்கள் செயற்படுவது வேதனையளிக்கிறது.

ஆசிரியர்கள் காலை 7.30 மணிதொடக்கம் 2.10 மணிவரை பாடசாலையில்வழங்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை இலவசமாகக் கற்பித்து நிறைவுசெய்யவேண்டிய கடமைப்பொறுப்பு உள்ளது என்பதை நினைவிற்கொள்ளவேண்டும்.

அதற்குத்தேவையான தொழில்நுட்ப வழங்களைப் பயன்படுத்தவேண்டுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறிருக்க பிரத்தியேகமாக மாணவர்களிடமிருந்து பணத்தை அறவிட்டு கற்பித்தலில் ஈடுபடுவதை நியாயப்படுத்த முடியாது என்றார்.இதேவேளை பாடசாலை நேரத்தில் தொழில் நுட்ப உதவியுடன் கற்பிப்பதற்கான நூணிணிட் சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.ஸ்மார்ட் போன் மற்றும் டிஜிடல் தொழில்நுட்ப வசதிகள் இல்லாத மாணவர்களின் நலன்கருதி வழிகாட்டல்கள் மற்றும் பாடத்திட்டம் தொடர்பான கற்றல் விடயங்களை உள்ளிடக்கிய செயலட்டைகள் வலயக்கல்வி அலுவலகத்தினால் அச்சுப்பிரதிகளாக அவசரமாகத் தயாரித்து கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கொரோனாவின் தாக்கத்தினால்

# இழந்த எதையும் மீளப் பெறலாம் ஆனால் உயிரை மீண்டும் பெற முடியாது

(பாறுக் ஷிஹான்)

கொரோனாவின் தாக்கத்தினால் இழந்த எந்த விடயத்தையும் நாம் மீள பெற்றுக்கொள்ள முடியும் ஆனால் தேகஆரோக்கியத்தையோ அல்லது இழந்த உயிரினையோ நாம் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாது என கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார் .

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடாத்திய விசேட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது

கொரோனா அபாயம் கூடிய கிராம சேவகர் பகுதிகளில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதன் முதலில் தடுப்பூசிகள் வழங்கப்படவிருக்கின்றது. அத்துடன் கர்ப்பிணிகளுக்கும் வழங்கப்படவுள்ளது. அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆடை தொழிற்சாலையில் கடமையாற்றுபவர்கள் ஆகியோருக்கும் தடுப்பூசி வழங்குவதில் முதன்மைப்படுத்தி இருக்கின்றார்கள்.ஏனையோருக்கு கட்டம் கட்டமாக தடுப்பூசிகள் கொடுக்கப்படும்.

முக்கியமாக எமது பிராந்தியத்தை பொறுத்தவரையில் 50ஆயிரத்தை தாண்டியவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.20 ஆயிரம் அரச உத்தியோகத்தர்களும் உள்ளனர். கர்ப்பிணிகளும் 2 ஆயிரம் அளவில் காணப்படுகின்றனர். எமக்கு கிடைக்கின்ற தடுப்பூசிகளின் எண்ணிக்கையை




பொறுத்து அவற்றை முன்னிலைப்படுத்தவுள்ளோம். மிகவிரைவில் தடுப்பூசி வரவிருக்கின்றது.

எனவே பொதுமக்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் எமது பிராந்தியமான பெரியநீலாவணை தொடக்கம் பொத்துவில் வரை பெற்றுச்செல்ல முயல வேண்டும்.இவ்விடயத்தை பிரயோசனமான முறையில் நாம் பயன்படுத்த வேண்டும்.மேலும் எமது நாட்டில் கொவிட் 19 இனை கட்டுப்படுத்துவதற்காக இரு வாரங்கள் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அத்தியவசியத் தேவை தவிர்ந்த ஏனைய அனைத்து விடயங்களும் முடக்கப்பட்டு உள்ளன.இச்செயற்பாடுகள் எமது நாட்டினை கொரோனாவில் இருந்து காப்பாற்றும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளதை நாம் அறிவோம்.எந்த விடயத்தையும் நாம் மீள பெற்றுக்கொள்ள முடியும் ஆனால் தேகஆரோக்கியத்தையோ அல்லது இழந்த உயிரினையோ நாம் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாது.

இந்த நிலையில் கல்முனை பிராந்தியத்தில் எமது கொரோனா ஒழிப்பு செயற்பாட்டினை சிலர் முடக்குவதற்கு முயற்சி செய்கின்றார்கள்.இவ்விடயம் எமக்கு கவலையளிக்கின்றது.இதை விட மதத்தலங்கள் பள்ளிவாசல்களில் சிலர் மறைமுகமாக பிரார்த்தனையில் ஈடுபடுவது கவலையளிக்கின்றது.பிரத்தியேக கல்வி நிலைய செயற்பாடுகளில் சிலர் இயங்கி வருவதும் நிறுத்தப்பட வேண்டும்.வீதிகளில் மக்கள் எவ்வித அத்தியவசிய தேவையின்றி அலைந்து திரிவது இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் உலா வருவது கடற்கரையில் திரிவது போன்ற செயற்பாடுகள் விஞ்சி செல்கின்றது.

மேலும் கல்முனை பிராந்தியத்திற்கு உட்பட்ட புதிய வளத்தாப்பிட்டி பகுதியினை தனிமைப்படுத்தி வைத்திருப்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்.இவ்வாறான பகுதிகள் போல் ஏனைய பகுதிகளும் தனிமைப்படுத்தல் சட்டத்தில் முடக்கப்படும் என்ற நிலையில் கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இது தவிர சம்மாந்துறை இறக்காமம் கல்முனை பகுதிகள் எமது அவதானத்துக்கு உட்பட்ட பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் இதை உணர்ந்தவர்களாக சுகாதார தரப்பினர் பொலிஸார் இராணுவத்தினருக்கு ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# சம்மாந்துறையில் கசிப்பு தயாரித்தவர் சிக்கினார் பொருட்களும் பொலிஸார் வசமானது



(நூருல் ஹுதா உமர்)

காரைதீவில் சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சிய ஒருவர் சம்மாந்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கசிப்பு காய்ச்ச பயன்படுத்திய பொருட்களும் சம்மாந்துறை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட சம்பவம் பதிவாகியது. பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து காரைதீவு பொலிஸ் காவலரன் பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான கே.கே. அமரானந்த தலைமையிலான பொலிஸ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலையே இந்த கைது நடவடிக்கை நடைபெற்றுள்ளது.

அம்பாறை, கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.எம். ஜயரட்னவின் ஆலோசனையில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி. எஸ். ஜெயலத்தின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்த சுற்றிவளைப்பில் காரைதீவு எட்டாம் பிரிவை சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கசிப்பு காய்ச்ச பயன்படுத்திய பொருட்களும் 40 கசிப்பு போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள நபரை சம்மாந்துறை நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தும் ஏற்பாடுகளை செய்துவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தம்பலகாமம் புதுக்குடியிருப்பு முதியோர்களுக்கு சினோபாம் டோஸ் தடுப்பூசி ஏற்றி வைப்பு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கொவிட்19 தடுப்பூசிகள் ஏற்றும் பணி தற்போது இடம்பெற்று வருகின்ற நிலையில்,பொது மக்களுக்கும் முதற்கட்டமாக முதலாவது சைனோபாம் டோஸ் ஏற்றப்படுகிறது.

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் உள்ள முதியோர்களுக்காக நேற்று தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு தம்பலகாமம் குளக்கோட்டன் பாடசாலையில் இடம் பெற்றது. தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் மலர்விழி ரவிந்திரராஜன் தலைமையில் இடம் பெற்ற குறித்த தடுப்பூசி ஏற்றல் நிகழ்வில் புதுக் குடியிருப்பு கிராம சேவகர் பகுதியை உள்ளடக்கிய 60 வயதுக்கு மேற்பட்டோர் களுக்காக சுமார் 155 நபர்களுக்கு ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெற்றது.

தம்பலகாமம் சுகாதார பிரிவில் புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் தெளுங்கு நகரில் அதிக கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதையடுத்து முதற்கட்டமாக உரிய கிராம பிரிவுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எதிர் வரும் காலங்களில் சிராஜ் நகர், முள்ளிப்பொத்தானை, கல்மெட்டியாவ போன்ற பகுதிகளுக்கும் சைனோ பாம் டோஸ் ஏற்றப்படும் என சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ஆறு பேர் கரடியனாறு பொலிஸாரினால் கைது!

மட்டக்களப்பு- கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாவிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த மற்றும் மரங்களை வெட்டிய ஆறுபேர் கரடியனாறு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திய மூன்று டிப்பர் வண்டிகள், இரண்டு உழவு இயந்திரங்கள் மற்றும் ஜேசீபி இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களான இந்த வாகனங்களின் சாரதிகள ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டதையடுத்து பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் கூறினர்.

இவர்களில் சிலர் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்ந்துள்ளனர். மேலும் சிலர் அனுமதிப்பத்திர விதிமுறைகளுக்கு முரணாக மணல் அகழ்ந்ததாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை சட்டவிரோத மணல் அகழ்விற்காக காட்டுவழியாக வாகனங்களைக் கொண்டுசெல்லும் நோக்குடன் பனைமரங்களை வெட்டி அழித்து குறுக்குப்பாதை அமைப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட ஜேசீபி இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி சமரகோன் தெரிவித்தார்.

# ஆதிவாசி குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கி வைப்பு



(அனுருத்தன்)

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தின் பயணக் கட்டுப்பாடு காரணமாக உணவின்றி பாதிக்கப்பட்டுள்ள ஆதிவாசி குடும்பங்களை சேர்ந்தோருக்கு மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேரடியாக சென்று நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

வாகரை பிரதேசத்தின் ஆதிவாசி மக்களின் தலைவர் அம்பலவர்கே நல்லதம்பி வேலாயுதம் பயணத் தடை காரணமாக தமது மக்கள் உணவின்றி அல்லலுறுவதாக தெரிவித்து இலங்கைக்கான ஆதிவாசிகளின் தலைவர் ஊர்வக்கே வன்னிலத்தோவிடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் அவர் மட்டக்களப்பு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதாத் மாசிங்கவிடம் இவ் விடயம் தொடர்பான கோரிக்கையினை முன்வைத்திருந்தார்.

ஆதிவாசி மக்களின் குறைகளை கேட்டறிந்து கொண்ட பொலிஸ் அத்தியட்சகர் தமது வழிகாட்டலில் இவ் நடவடிக்கையை முன்னெடுத்ததாக தலைவர் நல்லதம்பி வேலாயுதம் தெரிவித்தார். பணிச்சங்கேணி, மாங்கேணி,கிருமிச்சை,குஞ்சன் கல் குளம்,கொக்குவில் போன்ற கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இவ் நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தங்களுக்கு உணவு பொருட்கள் வழங்கி வைத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினருக்கு தமது நன்றியை தெரிவித்ததுடன் மேலும் இது போன்ற தமது மக்கள் ஏனைய கிராமங்களில் வாழ்ந்து வருவதாகவும் அவர்களுக்கும் நிவாரணப் பொதி வழங்க ஏற்பாடு செய்து தருமாறும் தலைவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

இவ் நிவாரண செயற்பாட்டில் வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.எம்.ஜெயசுந்தர,மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பி.கே.கெட்டியாராச்சி, ஏறாவூர், வாழைச்சேனை, மற்றும் வாகரை பொலிஸ் பொறுப்பதிகாரிகளான ஜெயந்த,தனஞ்சயபெரமுன,ஐ. பி.விஜேயவர்த்தன மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்த்தர்களும் கலந்து கொண்டனர்.